*2022 ஏப்ரல் 25]*

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2022 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

*பிற்பகல் 12–20*

## 6. தகவல் கோரல்

### மீண்டும் கொரோனா பரவல்-சட்டமன்ற உறுப்பினர்கள் முகக் கவசம் அணியாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை), மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா என்ற கொடிய நோய் மீண்டும் பரவத் தொடங்கியிருப்பது குறித்தும், அதைத் தடுப்பது குறித்தும் இரண்டு நாட்களுக்கு முன்பாக அரசின் சார்பாக ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, ஒரு நிமிடம். (குறுக்கீடு)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒன்றை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள். . . (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒரே நிமிடத்தில் நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஒரு வரி சொல்ல அனுமதியுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், என்னைப் பார்க்க வந்திருந்தபோது, இன்று Zero Hour எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் கூறியதை அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். நாளை எடுத்துக்கொள்வோம். நாளை நீங்கள் பேசலாம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் ஒன்றும் விரிவாகப் பேசவில்லை. அந்த அறிவிப்பில் mask அணியாதவர்களுக்கு ரூ.500/– அபராதம் விதிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இன்று, நம்முடைய சட்டமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் mask அணியவில்லை. இந்த அறிவிப்பு சட்டமன்ற உறுப்பினர்களைத் தவிர்த்து, பொதுமக்களுக்கு மட்டும்தானா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கொறடா திரு. வேலுமணி அவர்கள் உட்பட, எல்லோருமே அப்படித்தான் இருக்கிறார்கள். எல்லோரும் முகக் கவசத்தோடுதான் வந்தார்கள். பேசும்போது சில பேர் கழற்றிவிட்டார்கள், அவ்வளவுதான். மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், முகக் கவசம் கட்டாயம், கைகளை sanitise செய்துகொள்வது கட்டாயம், தனி மனித இடைவெளி அவசியம் போன்ற கொரோனாவுக்கான விதிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்று கடந்த 6, 7 மாதங்களுக்கு முன்பு பொதுமக்களுக்கு விதிமுறைகளை விதித்தார்கள். அந்த நேரத்தில்தான், மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில், யாரெல்லாம் பொது இடங்களில் முகக் கவசம் அணியவில்லையோ, அவர்களுக்கெல்லாம் 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. தொடர்ச்சியாக அன்று முதல் இன்று

*2022 ஏப்ரல் 25]* [திரு. மா. சுப்பிரமணியன்]

*வரை அதில் எந்தவிதமான மாற்றமும் செய்யப்படவில்லை; அந்த விதிமுறைகள் இதுவரையிலும் விலக்கிக்கொள்ளப்படவும் இல்லை. இந்த நிலையில்தான் மூன்றாவது அலை சுமுகமாக முடிந்து, மீண்டும் தொற்றின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்ற சூழ்நிலையில், இந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அறிவுறுத்தப்பட்டிருப்பதன் விளைவாகத்தான், மன்ற உறுப்பினர்களுக்கும் இங்கே முகக் கவசங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில், முகக் கவசம் அணிந்துகொள்வது என்பது அவரவர்களுடைய நலனுக்கு நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எல்லோருடைய மேசையின்மீதும் முகக் கவசம் வைக்கப்பட்டுள்ளது. கண்டிப்பாக எல்லோருமே அணிய வேண்டும். முகக் கவசம் அணிந்து பேசும்போது, sound-ல் வித்தியாசம் வருகிறது, அதனால், நாங்கள் இங்கே பேசும்போது கழற்றி வைத்துவிட்டு பேசுகிறோம். இது, முகக் கவசம் அணியக்கூடாது, சட்டத்தை மதிக்கக் கூடாது என்பதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 7. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 54-வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை**

---

### (அ) கோரிக்கை எண் 54-வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக்*